1969 செப்டம்பர் 11]

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நாங்கள் கேள்விகள் போடுகிறோம் : பதில்களை அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அவரவர்களுடைய அலுவலகங்களிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் ஃபைல்களை வைத்துக் கொண்டு அவற்றிலிருந்து எங்களுக்குத் தகவல்களைக் கொடுக்கிறார்கள். ஆனால், கூட்டுறவு அமைச்சரிடம் மட்டும் ஃபைல்களே இல்லை. (சிரிப்பு). ஏதோ, மளிகைக் கடையில் போல (குறுக்கீடு) . . . . I withdraw that word ஏதோ சிறு காகிதத் துண்டுகளில் அந்த நேரத்திற்கு வேண்டியதைக் கொடுப்பதாகக் காண்கிறதேயல்லாது, அதிகார பூர்வமாக, அரசாங்கத்தில் கொடுக்கப்படும் தகவல்களாக இல்லாமல், அவரே ஏதோ தனக்கு உதித்த எண்ணங்களைக் கொடுப்பதாகத்தான் தெரிகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அமைச்சர்கள் விடை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதேயல்லாது, எதிலிருந்து கொடுக்கிறார்கள் என்பதைக் கேட்க முடியாது. கொடுக்கும் தகவல் தவறாக இருந்தால், அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டலாம். அதற்கான நடவடிக்கை எடுக்க விதிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று சொல்ல முடியாது. காகிதம் இல்லாமலே கூட, நல்ல நினைவாற்றல் இருந்தால், அப்படியும் விடைகளை கொடுக்கலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : அந்தக் காகிதத்தில் கோமாளிப் படங்கள் கூடப் போடப்பட்டிருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைமைச் செயலருக்கு முறையீடுசெய்து தனி அதிகாரி போட்ட பிறகும், சரியாக விசாரிக்க வில்லை என்ற முறையீடு அரசாங்கத்திற்கு வந்ததா ? ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். விரைவாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பின் நடவடிக்கை பற்றிக் கேட்கிறார்கள். அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். முன்னால் நடந்ததுபற்றிப் புகார்கள் வந்து, 65-வது விதியின்படி, ரெஜிஸ்ட்ரார் அவர்கள் பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய விசாரணையும் செய்திருக்கிறார்கள். காவல் துறையிலும், யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விசாரணை செய்கிறார்கள். துப்பறிவு இன்னும் முடிவாகவில்லை.

Committee on Co-operation

* 221 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state when the Government expects to get the first and final reports from the Committee on Co-operation ,headed by Thiru K. Santhanam as Chairman?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திரு. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு தன்னுடைய சிபாரிசை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. 5—5—1969 அன்று பெறப்பட்டு, அது புத்தக வடிவத்தில் உறுப்பினர்கள் மேசையில் இன்றைக்குக் காட்சியளிக்கிறது.

THIRU K. VINAYAKAM : This report having been submitted to the Government some months back and having been printed in the month of May, may I know why there was such an inordinate delay in placing it on the table of the House?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலங்கடந்து கொடுத்ததற்குக் காரணம் என்ன என்ற கேள்வி இந்த மூலக் கேள்வியிலிருந்து வராது.

THIRU K. VINAYAKAM : Arising out of the answer given by the Hon. Minister. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி. உறுப்பினர் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அதைக் கேட்பதற்கு முறை வேறு. அது இப்பொழுது துணைக் கேள்வியாக வராது.

THIRU K. VINAYAKAM : Please listen to me. I am not trying to create trouble here and I have not come here for that purpose. I want more information from the Minister. May I know why there was such an inordinate delay in placing this report? I put a question and it is being answered today. It is strange that the placing on the table should coincide with the day on which the question I put is being answered.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஐந்தாம் தேதி, மே, 1969-ல் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அச்சடித்தது அல்ல. 5—5—1969 அன்று அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் பிறகு அச்சடிக்க நேரம் வேண்டும்.

Sarkarpathy Power House

* 222 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the inflow of water to the Sarkarpathy power house was interrupted about the 4th November 1968 due to the fall of a live Elephant into the reservoir?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் நமக்கு அந்நியச் செலாவணியைத் தேடிக் கொடுக்கின்றன. சரியாக வேலி போடாததால் தான் இம்மாதிரியான இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இனி இம்மாதிரி இழப்பு ஏற்படாமல் இருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?